**சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயப்பொருளின் வலியுறுத்தல்**

எனது அபிப்பிராயத்திற்கு முனைப்பழிவு இல்லாமல், நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் உள்ள தொடர்ந்து இயங்குதல் எடுகோள்கள் குறித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 2.7 க்கு நான் கவனத்தை ஈர்க்கிறேன். மேலே உள்ள குறிப்பில் கூறப்பட்டுள்ள படி, கம்பனியின் முகாமையானது கம்பனி தொடர்ந்து இயங்குவதற்கான திறனை மதிப்பிட்டு இருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் வணிகத்தில் தொடர்வதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக திருப்தி அடைந்துள்ளது. மேலும் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. மேலதிகமாக, கிராண்ட் ஹயாட் கொழும்பு திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு 2020 யூலை 08 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மேலும், 03 ஜனவரி 2022 திகதி இடப்பட்ட அமைச்சர்களின் அமைச்சரவையின் அங்கிகாரத்தின் அடிப்படையில், கம்பனியின் முகாமைத்துவம் USD 175 மில்லியன் திட்ட நிதியை USD 25 மில்லியன் உரிமையாண்மை மற்றும் USD 150 மில்லியன் கடன் மூலதனம் ஆகிய வழிகள் மூலம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும்

எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமக் குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **LKAS 16 – ஆதனம் பொறி உபகரணம்**<br>நியமத்தின் 16 ஆம் பந்தியின் படி, ஆதனம் பொறி உபகரணம் ஆகிய பொருட்களின் கிரயமானது சொத்துக்களுக்கு நேரடியாகக் கூறப்படும் எந்தச் செலவையும் உள்ளடக்கியது.<br>எவ்வாறாயினும், இயக்குனரின் ஊதியம், நிர்வாக இயக்குனரின் எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வாகனப் பராமரிப்புச் செலவுகள் ஆகியவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலையில் மூலதனமாக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலை ரூபா.11,430,548 ஆல் மிகைப்படுத்தப்பட்டிருக்கிறது. | PPE இன் கிரயம் மற்றும் PPE & திட்டத்திற்கு நேரடியாகக் கூறப்படும் எந்தச் செலவையும் இனங்காண்வதில் LKAS 16 உடன் உடன்பட்டுள்ளது, அத்தகைய செலவுகளை மூலதனமாக்க முடியும். நியாயமான செலவு ஒதுக்கீடு அடிப்படையில், மனித மூலதனத்தின் செலவு தாய் நிறுவனத்திற்கு (கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டட்) 10% , சினோலங்காவின் கீழ் செலவுகளுக்கு 10% மற்றும் மீதி 80% சினோலங்காவின் CWIP இன் கீழும் ஒதுக்கப்பட்டுள்ளது. சினோலங்கா ஹோட்டல் & ஸ்பாவின் இயக்குனர் சபையின் உறுப்பினர்கள் கிராண்ட் ஹயாட் திட்டத்தின் நிர்வாகத்திற்கான வழிகாட்டுதல்களை கொடுப்பதன் மூலம் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதில் மட்டுமே ஈடுபட்டுள்ளனர். மற்றும் அவர்களின் சேவைகளுக்கு செலுத்தப்படும் அனைத்துக் கட்டணங்களும் ஊதியங்களும் சொல்லப்பட்ட திட்டத்திற்கான நேரடியாகக் கூறப்படும் செலவு ஆகையால் CWIP க்கு விதிக்கப்படுகின்றன. கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது (இடைநிறுத்தப்பட்ட காலம் தவிர) தொடக்கத்திலிருந்தே CWIP இன் கீழ் இத்தகைய செலவுகளை நிறுவனம் இனங்கண்டுள்ளது. | கம்பனியானது நியமத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செலவுகளை மூலதனமாக்க வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. மேலும் 2020 | தேவையான மீதி நிதிகள் முறையான நிதியளிப்பத் திட்டத்தின் ஊடாக வடிவமைக்கப்படும் வரைக்கும் திட்டத்தின் கட்டுமானத்தை தொடருவதற்கு ரூபா. 6 பில்லியன் உட்செலுத்த SLIC க்கு அங்கிகரிக்கப்பட்டுள்ளது.<br><br>அமைச்சரவை ஆணையின் படி, SLIC இத் திட்டத்திற்கு LKR 6 பில்லியன் நிதி அளிக்க வேண்டும். எவ்வாறாயினும், | முகாமைத்துவமானது திட்டத்தின் எதிர்கால வழிகாட்டுதலுக்கு உரிய அதிகாரியுடன் ஒருங்கிணைக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

ஆம் ஆண்டு யூலை 8 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கிராண்ட் ஹயாட் கொழும்பு திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மேலும், 01 ஜனவரி 2022 திகதியிடப்பட்ட Ref 21/2278/306/100 அமைச்சரவையின் ஒப்புதலின் அடிப்படையில், கம்பனியின் முகாமைத்துவம் USD 175 மில்லியன் திட்டத்திற்கான நிதியை USD 25 மில்லியன் உரிமை மூலமும் USD 150 மில்லியன் கடன் மூலதனம் மூலமும் ஏற்பாடு செய்ய உழைத்து வருகிறது. எவ்வாறாயினும் கிராண்ட் ஹயாட் கொழும்பு திட்டத்தின் நிர்மாண பணிகளை தொடர்வதற்கு ஸ்ரீ லங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (இறுதி தாய் நிறுவனம்) அல்லது அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவு தேவைப்படும்.

இதுவரை LKR 2 பில்லியன் மட்டுமே உட் செலுத்தப்பட்டுள்ளது மற்றும் 10 யூன் 2021 அன்று வழங்கப்பட்ட சாதாரண பங்கிலிருந்து LKR 2 பில்லியன் பரீசீலனை நிலுவையில் உள்ளது.

12 ஏப்ரல் 2022 அன்று இலங்கை மத்திய வங்கியானது "முன்கூட்டிய கடன் இயல்பு நிலையை" அறிவிக்கும் புள்ளியில் இருந்து USD 175 மில்லியனுக்கான D/E கடன் வரவில்லை.

மேற்கூறிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, திட்டத்தின் முன்னோக்கிச் செல்லும் வழியில் நிதி அமைச்சு மற்றும் திறைசேரிடம் இருந்தான உத்தரவுகளுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்.

மறு நிகழ்வு செலவுகளை நிர்வகிப்பதற்றான திட்டமானது இன்று வரை வரையறுக்கப்பட்ட நிதியைக் கொண்டுள்ளது, முடிக்கப்பட்ட வேலைகளின் பரிபாலிப்பு மற்றும் பராமரிப்பு மற்றும் டிசம்பர் 2022 வரையான ஊதியம், தொடர்புடைய அமைச்சிடமிம் இருந்து 100% விலக்கில் உத்தரவைப் பெற்றுக் கொள்ள நாங்கள் பல கோரிக்கைகளைச் விடுத்துள்ளோம்.

13 ஒக்டோபர் 2022 திகதியிடப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரக் குறிப்பு: SNHS/2022/21 மற்றும் 20 ஒக்டோபர் 2022 திகதியிடப்பட்ட தொடர்ந்த பணிப்பாளர் சபை நிமிடக் குறிப்பு 2022-14 இன் படி உருப்படி 5, கிராண்ட் ஹயாட் திட்ட தற்போதைய நிலையை விரிவாக விவாதிக்கின்றது. தற்போதைய நெருக்கடியான பொருளாதாரப் பின்னணி, மோசமடைந்து வரும் பணப்பழக்க நிலமை,SLIC மூலம் கிடைக்காத நிதி மற்றும் அமைச்சரவை

அங்கிகரிக்கப்பட்ட கடன்/மூலதன நிதியளிப்பு விருப்பத்தேர்வுகள் வரப்போவதில்லை என்பவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ள பணிப்பாளர் சபை ஒருமனதாக முடிவெடுத்துள்ளது. தீர்க்கப்படாத பொறுப்புக்களில் இருந்து கம்பனிக்கு கூடுதல் செலவைத் தவிர்க்க வெகு விரைவில் 100% விலக்குடன் நடவடிக்கையைத் தொடர அமைச்சரவையின் ஒப்புதலை நாடவும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 760,645,501 தொகை இலாபமாக காணப்பட்டதுடன் மற்றும் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா.193,289,884 தொகையாக காணப்பட்டது. ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா. 953,935,385 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. நடந்து கொண்டிருக்கும் மூலதன வேலைகளினுடைய மறு மதிப்பீட்டு மிகையே அதிகரிப்பிற்கான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| **ஆண்டு** | **2021 ரூபா.** | **2020 ரூபா.** | **2019 ரூபா.** | **2018 ரூபா.** | **2017 ரூபா.** |
|---|---|---|---|---|---|
| நிதி வருமானம் | 28,749,233 | 10,464,970 | 11,041,814 | 10,339,498 | 81,954,784 |
| நிதி வருமானத்தின் அதிகரிப்பு/குறைவு வீதாசாரத்தில் | 175% | -5% | 7% | -87% | 31% |
| நிர்வாக செலவினங்கள் | 81,210,002 | 131,209,337 | 178,337,425 | 81,228,313 | 99,427,238 |
| நிர்வாக செலவினத்தின் அதிகரிப்பு/குறைவு வீதாசாரத்தில் | -38% | -26% | 120% | -18% | -13% |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) | 760,645,501 | (193,289,884) | (5,133,182,782) | (202,725,525) | (29,768,795) |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) இன் அதிகரிப்பு/குறைவு வீதாசாரத்தில் | -494% | -96% | 2,432% | 581% | -41% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதங்கள் | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|
| திட்ட நிறைவு விகிதம் | 52% | 36.84% | 36.74% |
| மூலதன தொழிற்படு விகிதத்திற்கான தாமதக்கட்டணம் | 4.67% | 5.61% | 5.61% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திட்ட முகாமைத்துவ செயற்திறனின்மை காரணமாக திட்ட நீடிப்புக்காக ரூபா. 913,174,853 தொகையை கம்பனி செலவிட்டிருந்தது. | கம்பனி அனுபவிக்கும் நிதி நெருக்கடிகளால் திட்டத்தை முடிப்பது தாமதமாக இருக்கிறது அத்துடன் இதன் விளைவாக நீடித்த செலவுகள் ஏற்படுகின்றன இது இந்த தன்மையுடைய திட்டத்தில் தவிர்க்க முடியாதது. | ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன் முகாமைத்துவமானது போதுமான அளவு நிதி வருவதை உறுதி செய்ய வேண்டும். இது இந்த தன்மையான தேவையற்ற செலவைத் தவிர்க்க இயலுவாக இருக்கும். |

### 3.2 அடையாளங்காணப்பட்ட இழப்புகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 டிசம்பர் 2021 இல் சொத்துக்களை மெய்மையாய்வு செய்ய முகாமைத்துவத்தால் நியமிக்கப்பட்ட குழுவால் சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டது.<br>எவ்வாறாயினும் ரூபா. 4,378,181 இல் சொத்து மதிக்கப்பட்டது மற்றும் 287 உருப்படிகள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியானது தொலைந்த அல்லது சேதமடைந்த உருப்படிகளை மீண்டும் மெய்மையாய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. இறுதி அறிக்கை விரைவில் இயக்குனர் சபையின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.<br><br>தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் பூரண தேய்மானம் செய்யப்பட்டிருந்தன அத்தோடு பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லாமல் இருக்கலாம் மற்றும் உதிரிப் பாகமாக அகற்றப்பட்டிருந்திருக்கலாம்.<br><br>கம்பனியின் அலுவலகம் நேரத்திற்கு நேரம் மாற்றப்பட்ட போது சில தளபாடங்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து நகர்த்தப்பட்டிருந்தன. மற்றும் அந்த செயற்பாட்டினால் சேதங்கள் ஏற்பட்டிருக்க முடியும் அவை பயன்படுத்த முடியாதவையாகவும் இருக்கும். | முகாமைத்துவமானது வருடாந்த சொத்து மெய்மையாய்வின் துல்லியத்தை உறுதிப்படுத்துவதையும் மற்றும் மாறுபாடுகளுக்கான காரணத்தை அடையாளம் காண்பதையும் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப தேவையான சீராக்கங்களைச் செய்வதையும் உறுதிப்படுத்த வேண்டும். |

## 3.3 திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 15 ஆகஸ்ட் 2012 இன் அசாதாரண வர்த்தமானி எண். 1771/18 கீழ் கம்பனி USD 158,890,000 (ரூபா.18.5 பில்லியன்) மொத்த முதலீட்டில் இல.116 , காலி வீதி , கொழும்பு 03 இல் 90 சேவைக் குடியிருப்புக்களுடன் 475 அறைகள் கொண்ட நகர ஹோட்டலை நிர்மாணித்து செயல்படுத்தும் திட்டத்தை தொடங்கியிருக்கிறது. மேற்கூறிய வர்த்தமானியின் படி திட்டத்தின் தொடக்க திகதி 19 யூலை 2019 ஆக இருந்தது மற்றும் வணிக நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மற்றும் தொடங்குதல் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 24 மாதங்களுக்குள் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும் அந்தத் திட்டம் இன்னும் நிறைவடைந்திருக்கவில்லை. 10 யூலை 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவை முடிவு எண். 20/1042/204/050-I இன் படி , இந்த திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு சுமார் ரூபா. 60 பில்லியன் ஆகும். 458 அறைகளில் 236 அறைகளைக் கொண்ட ஒரு முழுமையான ஹோட்டலாக செயல்பட 31 ஆம் நிலையுடன் 16 நிலைகளை பகுதியளவில் நிறைவு செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.<br><br>கட்டம் 2, மீதமுள்ள 236 அறைகள் மற்றும் 100 சேவை அடுக்குமாடி குடியிருப்புக்களை நிறைவு செய்யும். முதல் கட்ட நிறைவு திகதியின் இலக்கு ஆகஸ்ட் 2021 ஆக இருந்தது.<br><br>எவ்வாறாயினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான தாமதமாக அசல் திட்ட நிறைவு திகதியான 19 யூலை 2014 இலிருந்து ஆறு (06) ஆண்டுகள் மற்றும் ஐந்து (05) மாதங்கள் அவதானிக்கப்பட்டது. | தாமதத்திற்கான காரணங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இது அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளைச் சார்ந்து இயங்கும் கம்பனி என்பதால் , முகாமைத்துவம் முன்னோக்கிச் செல்லும் வழியில் தொடர்புடைய அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறது.<br><br>தற்போதைய நெருக்கடியான பொருளாதார நிலமைகளுடன் மீண்டும் ஒருமுறை, திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது மற்றும் விலக்குவதற்கு முன்னோக்கிய வழிக்கான அமைச்சரவையின் வழிகாட்டுதலுக்காக காத்திருக்கிறது. 1 யூலை 2022 இலிருந்து திட்டம் குறைக்கப்பட்டது. | முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டிலிருந்து எதிர்பார்த்த வருவாயைப் பெறவும் திட்டச் செலவு அதிகரிப்பதைத் தடுக்கவும் கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் முகாமைத்துவம் திட்டத்தை முடிக்க வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.2(b) இற்கு அமைய அனுமதிக்கப்பட்ட பணிநிலை விபரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுவன விளக்கப்படம் கிடைப்பனவுத்தன்மை அற்றதாக இருக்கப்பட்டிருந்தது. | முன்னால் மனித வள முகாமையாளர் நிறுவன விளக்கப்படத்தை உருவாக்கி இருந்தார் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அது வழங்கப்படும். | முகாமைத்துவமானது சுற்றறிக்கையின் விதிகளுடன் இணங்க வேண்டும். மற்றும் கம்பனியில் நல்லாளுகை கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.3.1 இற்கு அமைய நிறுவனத்திற்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவிஉயர்வுக்கான அங்கிகரிக்கப்பட்ட திட்டம் என்பன கிடைப்பனவுத்தன்மை அற்றதாக இருக்கப்பட்டிருந்தது. | மனித வள பதவிகள் வெற்றிடமாக உள்ளன மற்றும் மேலதிக அறிவிப்பு வரை அனைத்து ஆட்சேர்ப்புகளும் முடக்கப்பட்டுள்ளன. |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.7 இற்கு அமைய சம்பளம் மற்றும் படிகள் அங்கிகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் ஊழியர்களுக்கான ஊதியக்கட்டமைப்பை தீர்மானிக்க நிறுவனத்திடம் சரியான நடைமுறை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. | மனித வள பதவிகள் வெற்றிடமாக உள்ளன மற்றும் மேலதிக அறிவிப்பு வரை அனைத்து ஆட்சேர்ப்புகளும் முடக்கப்பட்டுள்ளன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெருநிறுவனத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1.3 இற்கு அமைய கம்பனியானது பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. | திட்டத்தின் கட்டுமானத்தை முடிக்க கம்பனிக்கு தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் செயற்றிட்ட நிறைவுத்திட்டம் நடைமுறையிலுள்ளது இது தேவைக்கேற்ப பெருநிறுவனத் திட்டமாக நீடிக்கப்பட உள்ளது. | கம்பனி அதன் மூலோபாய நோக்கங்களை அடைய ஒரு பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். |

### 4.2 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்திற்கு இயக்குனர் சபையின் அங்கிகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தை முடிப்பது தொடர்பான செயற்றிட்டம் உள்ளது. | கம்பனியானது செயற்றிட்டத்திற்கான அங்கிகாரத்தை ஆண்டின் தொடக்கத்தில் பெற வேண்டும் மற்றும் அதன் வருடாந்த இலக்குகளை அடைய செயல்படுத்த வேண்டும். |

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.7.5 இற்கு அமைய செயற்பாடுகள் உண்மையாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக அமைப்பு முறைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வது உள்ளக கணக்காய்வு முகாமையாளரின் பொறுப்பாகும். ஆனால் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளரின் பங்கு கொடுப்பனவுகளின் மீது முன் கணக்காய்வினை நடாத்துவதும் கொடுப்பனவு கைச்சாத்துக்களை உறுதிப்படுத்துவதற்கும் வரையறுக்கப்பட்டிருந்தது. | 2015 இல் இருந்து கன்வில் குழுமத்தின் கீழ் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்திற்கு கால இடைவெளியில் உள்ளக கணக்காய்வு செயற்பாடு வெளிக்களம் செய்யப்பட்டது. வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின் அடிப்படையில், அவர்கள் 30 யூன் 2018 வரையான காலாண்டு அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு அவர்களை பரிந்துரைக்கப்பட்டும் கூட கட்டுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதாலும் தொடர்ச்சியான கோவிட்19 கட்டுப்பாடுகளாலும் உள்ளக கணக்காய்விற்கு அழைக்கப்படவில்லை.<br><br>உள்ளக கணக்காய்வு முகாமையாளரானவர் ஏற்கனவே உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட ஏதாவது குறைபாடுகள் என்பவற்றை மதிப்பாய்வு செய்கிறார். மேலும் அவர் முன்பு முன்னிலைப்படுத்தப்பட்ட பகுதிகளின் நிலையை மதிப்பாய்வு செய்து குழுவிற்கு அறிக்கை செய்கிறார்.<br><br>திட்ட நிதியளிப்பில் உள்ள சிக்கல்கள் காரணமாக கட்டுமானப் பணியினுடைய மந்தமடைந்த நிலையில் தற்போது இச் செயல்முறையைத் தொடர்கிறது. கட்டுமானப் பணிகளின் மீள் தொடக்கத்துடன் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் வலுப்பெறும். | பெருநிறுவன நோக்கங்களை அடைவதற்கான வினைத்திறனுள்ள முகாமைத்துவ கருவியாக கம்பனிக்கான உள்ளக கணக்காய்வின் வினைத்திறனான தொழிற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். |

## 4.4 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 7.4.1 இற்கு அமைய இந்தக் குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது வழக்கமான அடிப்படையில் கூட வேண்டும். எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டில் ஒரு முறை மாத்திரமே கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் படி கணக்காய்வுக் குழுவின் வினைத்திறனான செயற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். |

## 4.5 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.2 இற்கு அமைய கம்பனிக்கான வருடாந்த பாதீட்டை நிறுவனம் தயாரித்திருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | கம்பனியின் செலவினங்களை முறையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு முகாமைத்துவத்தை செயல்படுத்துவதற்காக வினைத்திறனான பாதீட்டு கட்டுப்பாடு கம்பனியில் இருப்பதை சபை உறுதி செய்ய வேண்டும். |